TNTP120000362014

Presented on : 24-02-2014
Registered on : 24-02-2014
Decided on : 10-08-2026
Duration : 12 years, 5 months, 14 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
முன்னிலை. திரு தி.அன்பு, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண்.56/2014**

1. முத்துகிருஷ்ணன்
2. விஜயகுமார்
3. சிவசந்திரன்
4. லோகநாதன் (இறந்துவிட்டார்)*
5. செல்வகுமார்

*** 4 ம் பிரதிவாதி கடந்த 12.12.2023 ம் தேதி இறந்தவிட்டதாக 12.11.2024 ம் தேதியிட்டு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதியப்பட்டது.**

.. வாதிகள்

/எதிர்/

1. தமிழக அரசு அதன் பிரதிநிதி
   மாவட்ட ஆட்சியர்
2. மாவட்ட பதிவாளர், அரியலூர்
3. வட்டாட்சியர், துறையூர்
4. சார்பதிவாளர், துறையூர்
5. கிராம நிர்வாக அலுவலர், மருவத்துார்.
6. ஆனந்தகுமார், புத்தனாம்பட்டி
7. கண்ணதாசன், துறையூர்.

.. பிரதிவாதிகள்

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:19:02 +0530

இவ்வழக்கானது என்முன்பாக கடந்த . 08.2026 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு டி.வி.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரில்லாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 7 ம் பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு கே.சசிகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

தாவாச்சொத்துக்கள் வாதிகளுக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் பின்னோடியாக 1,2,3,4,5 பிரதிவாதிகள் தாவாச்சொத்துக்களைப் பொருத்து வருவாய்த்துறை கணக்கு, பதிவுத்துறை கணக்குகளில் வாதிகளின் பெயர்களை சேர்க்கவேண்டி ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், அதன் பின்னோடியாக 6,7 பிரதிவாதிகள் அசல் வழக்கு முடியும் வரை தாவாச்சொத்துக்களில் எவ்வித பணிகளும் செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் இவ்வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**.

1ம் வாதி லேட்.வரதராஜு நாயுடுவின் மகன் ஆவார். இதர வாதிகள் லேட். பரதராஜு நாயுடுவின் பேரப்பிள்ளைகள் ஆவார்கள். வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 6,7 பிரதிவாதிகளும், வாதிகளும் மருவத்துார் கிராமத்தை சேர்ந்த ஒரே ஜாதியினர். வாதிகளுக்குண்டான நிலங்களை சுற்றிலும் மூன்று பக்கம் 6,7 பிரதிவாதிகளின் நிலங்கள் உள்ளது. நடு மத்தியில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது. இதனை நீண்ட நாட்களாகவே 6,7 பிரதிவாதிகள் குறைந்த விலைக்கு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை கேட்டார்கள். வாதிகள் தர மறுத்ததால், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை போலியாக ஆவணங்கள் தயார் செய்து 6,7 பிரதிவாதிகள் நிலங்களை அபகரிக்க திட்டமிட்டார்கள். அதனை வாதிகளுக்கும் 6,7 பிரதிவாதிகளுக்கும் பகை ஏற்பட்டது.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:19:32 +0530

3. ஆதியில் தாவா சொத்து 1ம் வாதியின் கொல்லுதாத்தாவான முத்து நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது. முத்து நாயுடுவிற்கு ராமசாமி நாயுடு, வரதராஜு நாயுடு, ரெங்கராஜு நாயுடு ஆகிய மூன்று மக்கள் உள்ளார்கள். முத்து நாயுடு காலத்திற்கு பின்பு அவரது மக்கள் ராமசாமி நாயுடு, வரதராஜு நாயுடு, ரெங்கராஜு நாயுடு ஆகியோர்கள் தங்களுக்குள் 15.03.1961ம் தேதி பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு, பாகம் செய்த நாள் முதல் 1ம் வாதியும் அவரது குடும்பத்தினரும் சர்வ சுதந்திரமாக தாவாச்சொத்தில் வேண்டும் பயிர் சாகுபடி செய்து வந்தார்கள்.

4. பாகப்பத்திரம் A ஷெட்யூல், B ஷெட்யூல், C ஷெட்யூல் என முறையாக அளவீடு செய்யப்பட்டு பாகப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. இதில் 1ம் வாதியின் அப்பாவும், இதர வாதிகளின் தாத்தாவுமான வரதராஜு நாயுடு என்பவருக்கு B ஷெட்யூல் காட்டப்பட்டுள்ளது. 6ம் பிரதிவாதி வாதிகளின் குடும்பம் மீது துறையூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் CC165/2010 என்ற வழக்கை தாக்கல் செய்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் தேடும்பட்சம் 2010ம் வருடம் வாக்கில் 6ம் பிரதிவாதி தமக்கு எவ்விதத்திலும், பாத்தியமும், பின்தொடர்ச்சியும் இல்லாத தாவா சொத்தை 7ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்திருப்பது தெரியவந்தது. உடன்காலில் வாதிகள் 6,7 பிரதிவாதிகளிடம் தங்கள் நிலத்தில் எவ்விதமான இடைஞ்சலும் செய்யவேண்டாம் என்று கேட்ட வகையில் 6,7 பிரதிவாதிகள் உங்கள் நிலத்தை நாங்கள் என்ன செய்கின்றோம், ஒருநாளும், ஒரு காலமும் இடைஞ்சல் செய்யமாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதன்படி நடந்துகொள்ளாததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. சர்வே எண்.494/4ல் 0.10 செண்ட்நிலமும், 494/2 0.25 செண்ட் நிலமும், 494/3A–ல் பொதுப்பாதையும் வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்தது. இதில் சர்வே எண்.494/2ல் 0.25 செண்ட் நிலம் இது கிணறு கூட்டாகும். சர்வே எண்.494/3A ல் இதுவும் பொதுப்பாதை கூட்டாகும். சர்வே எண்.494/4ல் 0.10 செண்ட் நிலம் மட்டுமே தற்சமயம் பிரச்சினையில் உள்ளது. 6,7 பிரதிவாதிகள் சர்வே எண்.494/4ல் 0.10 செண்ட் நிலத்தை தங்களுக்கு பாத்தியப்பட்டது போல எண்ணிக்கொண்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 10 செண்ட் நிலத்தையும், வீட்டுமனை போட்டு மனை பிரித்துக்கொடுக்க செப்பனிட்டு வேலை பார்த்து

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:19:49 +0530

வருகிறார்கள். அவ்வாறு 6,7 பிரதிவாதிகள் வீட்டுமனை போட்டு விற்பனை செய்வதற்கு எவ்வித உரிமையும்இல்லை. 6ம் பிரதிவாதி 2010ம் வருடம் வாக்கில் 7ம் பிரதிவாதிக்கு வழக்கிடை சொத்தையும் சேர்த்து தவறுதலாக ஜெனரல் பவர் பத்திரம் கொடுத்துள்ளார். அதன் காரணமாக 7ம் பிரதிவாதி தனக்கு வழக்கு சொத்து முழுமையாக பாத்தியப்பட்டது என எண்ணிக்கொண்டு வீட்டுமனை போட்டு தொழில் லாபம் அடைய எத்தநித்து வருகிறார். 7ம்பிரதிவாதி ஆள்பலம், பணபலம் மிக்கவர். வாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை 6,7 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆக்கிரமிப்பு செய்து பிளாட் நிலம் போடுவதற்கு ஏற்பாடு செய்ததை 06.02.2014ம் தேதி தடுத்துவிட்டார்கள். ஆனால் 6,7 பிரதிவாதிகள் கேட்கவில்லை. தொடர்ந்து அத்துமீரள் செய்து வருகிறார்கள். எனவே, இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. <u>**3ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட் 1,2,4,5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**</u>

வாதிகளின் வழக்கு பொய்யும், புரட்டும், மோசடியுமாகும். தாவாச்சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்ட ஆதரவுகள் சம்மந்தமாக இப்பிரதிவாதிகளுக்கு ஏதும் தெரியாது. 6,7 பிரதிவாதிகளுக்கும், வாதிகளுக்கும் உண்டான உரிமை சம்மந்தமாகவும், தாவாச்சொத்துக்களைப் பொருத்தும் அவர்களுக்குள் உள்ள பிரச்சினைகள் சம்மந்தமாகவும் மாண்புமிகு நீதிமன்றமே தீர்வு காணவேண்டியுள்ளது. தாவாச்சொத்துக்கள் முத்துகிருஷ்ணன், கண்ணதாசன், பரிமளாராணி ஆகியோர்கள் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் பதிவாகி உள்ளது. மேலும் சர்வே எண்.494/4, சர்வே எண்.494/3B உடன் இணைக்கப்பட்டுள்ளது. வழக்குரையில் 1 முததல் 5 பிரதிவாதிகளைப் பொருத்து எதற்காக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளோம் என்ற விவரத்தினை கொண்டுவரவில்லை. ஆகவே, இப்பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையற்றவர்களாவார்கள். வாதிகளும், 6,7 பிரதிவாதிகளும் தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்து நடத்தி கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. வாதிகள் இவ்வழக்கை 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் தாக்கல் செய்ய எவ்வித வழக்குமூலமும் இல்லை. வழக்கு மூலம் சம்மந்தமாக எதுவும் சொல்லப்படவில்லை. எனவே வாதிகள்வழக்கு 1 முதல் 5 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:20:08 +0530

7. **<u>7 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>**

வாதிகளின் வழக்கு பொய்யும் புரட்டும் மோசடியுமாகும். வாதிகளுக்குண்டான நிலங்களை சுற்றிலும் பிரதிவாதிக்கு நிலங்கள் உள்ளது. நடுமத்தியில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் ஏதும் இல்லை. அங்கு இப்பிரதிவாதிக்கு மட்டும் தான் பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. தாவாச்சொத்து 1ம் வாதியின் கொள்ளுத்தாத்தாவான முத்துநாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டது என பிராதில் சொல்லியிருப்பது சரியல்ல. உண்மையில் தாவாச்சொத்துக்களுடன் கூடிய இதர சொத்துக்கள் முத்துசாமி நாயுடு மற்றும் அவரது மூத்த சகோதரர் ரெங்கசாமி நாயுடு ஆகியோர்களுடன் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படியார்கள் தாவாச்சொத்துக்களுடன் கூடிய குடும்ப சொத்துக்களை பாகம் ஏதும் செய்துகொள்ளாமல் கூட்டு குடும்ப சொத்தாக அனுபோகம் செய்து வந்தார்கள். மேற்படி முத்துநாயுடுவிற்கு ராமசாமி, வரதராஜ் மற்றும் செல்வராஜ் ஆகிய மூவரும் மகன்கள். அதேபோல், ரெங்கசாமி நாயுடுவிற்கு சிதம்பரம் என்ற மன் இருந்தார்.

8. முத்து நாயுடும் அவரது மூத்த சகோதரர் ரெங்கசாமி நாயுடும் தாவா சொத்துக்களுடன் கூடிய தங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் செய்துகொள்ளாமல் இறந்துவிட்டார்கள். அதன்பிறகு முத்துநாயுடு மகன்கள் ராமசாமி, வரதராஜ், ரெங்கராஜ் ஆகியோர்கள் ஒரு தரப்பினர்களாக சேர்த்தும், இறந்த ரெங்கசாமி மகன் சிதம்பரம் ஒரு தரப்பினராக இருந்தும் 14.03.1961ம் தேதி தங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் செய்துகொண்டார்கள். மேற்படி பாகப்பத்திரத்தில் A ஷெட்யூல் சொத்துக்கள் இறந்துபோன ரெங்கசாமி நாயுடு மகன் சிதம்பரத்திற்குபாக சொத்தாக கிடைத்துள்ளது. அதுதான் வழக்கு சொத்துஆகும். அந்த சொத்திற்கு பைமாஷ் புன்சை 892 என்று காணப்பட்டு, பி ஷெட்யூல் நிலத்திற்கு வடக்கு எனவும், பொது கிணற்றிக்கு கிழக்கு என தெளிவாக காட்டப்பட்டுள்ளது. பி ஷெட்யூல் சொத்துக்களை மேற்படி இறந்துபோன முத்துநாயுடுவின் வாரிசுகளான ராமசாமி, வரதராஜ், ரெங்கராஜ் ஆகியோர்கள் அடைந்துகொள்வது என காட்டப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பத்திரம் பி ஷெட்யூல் சொத்தில் தாவாச்சொத்துக்கள் அடங்கிய சொத்துக்கள் ஏதும் கிடையாது.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:20:18 +0530

9. தாவாச்சொத்துக்கள் இல்லாத பாகப்பத்திரத்தில் கண்ட பி ஷெட்யூல் சொத்துக்களை ராமசாமி, வதராஜ், ரெங்கராஜ் ஆகியோர்கள் 15.09.1961 ம் தேதி தங்களுக்குள் பாகப்பத்திரம் செய்துகொண்டார்கள். மேற்படியார்களுக்குள் ஏற்பட்ட பாகப்பத்திர ஆவணத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும கிடையாது. 1 ம்வாதியின் தகப்பனாருக்கும், 2 முதல் 5 வாதிகளின் தாத்தாவாகிய வரதராஜ் நாயுடுவிற்கும் தாவா சொத்தில் எவ்வித சம்மந்தமும் , உரிமையும், பாத்தியமும் கிடையாது. வரதராஜ் நாயுடு, 1 ம் வாதிக்கு 09.06.2003 ம்தேதி அவருக்கு பிரிந்தபாகச்சொத்தினை ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார்.அதில் தாவாச்சொத்துக்கள் ஏதும்குறிப்பிட்டு காட்டப்படவில்லை. குற்றவியல் நீதிமன்ற வழக்கு தாவாவிற்கு சம்மந்தப்பட்டதல்ல.

10. உண்மையில் தாவாச்சொத்து இறந்துபோன ரெங்கசாமி நாயுடு மகன் சிதம்பரத்திற்கு 14.03.1961 ம் தேதியில் ஏற்பட்ட பாகப்பத்திரத்தின் வாயிலாக மேற்படி பாகப்பத்திர A ஷெட்யூல் சொத்தினை அடைந்து அனுபோகம் செய்து வந்தார். சிதம்பரம் தங்கள் வாரிசுகளான துரைராஜ், ஆனந்தகுமார் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு தாவா சொத்துடன் கூடிய குடும்ப சொத்துக்களை எவ்வித ஆதரவும் செய்யாமல் இறந்துவிட்டார். அதன்பின்னர் துரைராஜ், ஆனந்தகுமார் தாவாச்சொத்துடன் கூடிய தங்களது குடும்ப சொத்துக்களை 24.09.1982 ம் தேதி பாகம் செய்து கொண்டார்கள். அதில் எ ஷெட்யூலில் தாவாச்சொத்து ஒதுக்கப்பட்டு சர்வே எண்.494/4 ஏக்கர் 0.10 செண்ட் நிலமும், சர்வே எண்.494/2 ஏக்கர் 0.25 செண்டில் உள்ள கிணறு பாகம் உள்பட துரைராஜ் அடைந்து கொள்வதற்கு பாத்தியப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின் துரைராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்த வகையில் சப்டிவிசன் செய்யப்பட்டது. தாவாச்சொத்திற்கு சர்வே எண்கள் 494/3 எ,3 சி ஆகிய பிரிவினை செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ளார்.

11. துரைராஜ் இறந்தபிறகு தாவாச்சொத்தினை அவரது மனைவி நாகமணி, மகன் சிவசந்திரன் மற்றும் மகள்கள் லட்சுமி, மோகனாம்பாள் ஆகியோர்கள் கூட்டு சொத்தாக அனுபவம் செய்து வந்தார்கள். அதனை வருவாய்த்துறையில் அங்கீகாரம் செய்து நாகமணி பேரில் தாவாச்சொத்தினைப் பொருத்து வருவாய்த்துறையில் பட்டா

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:20:30 +0530

வழங்கப்பட்டுள்ளது. தாவாச்சொத்தினை நாகமணி மற்றும் அவரது மகன், மகள் ஆகியோர்கள் சேர்ந்து 29.10.2004ம் தேதி ரெங்கநாதன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். அதன்பின் ரெங்கநாதன் அனுபவம் செய்து வந்தார். அதன்பின் ரெங்கநாதன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. ரெங்கநாதன் துரைராஜ் சகோதரர் ஆனந்தகுமாரிடமிருந்து ஏற்கனவே 30.12.2002ம் தேதி ஆனந்தகுமாருக்கு பிரிந்த பாகத்தினை கிரையம் பெற்று தற்போது நாகமணி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற தாவாச்சொத்தோடு சேர்த்து ஒன்றாக அனுபோகம் செய்து வந்தார். அதன் அடிப்படையில்தான் ரெங்கநாதனுக்கு வருவாய்த்துறையில் தாவாச்சொத்துக்களுடன் கூடிய இதர சொத்துக்களையும் சேர்த்து பட்டா வழங்கப்பட்டிருந்தது. மேற்படி ரெங்கநாதனிடமிருந்து 6ம் பிரதிவாதி தாவாச்சொத்துக்களுடன் கூடி இதர சொத்துக்களை சேர்த்து 28.05.2009ம் தேதி கிரையம் பெற்று தன் இஷ்டம்போல் அனுபவம் செய்து வந்தார். அதன் அடிப்படையில் 6ம் பிரதிவாதிக்கு வருவாய்த்துறையில் பட்டா வழங்கப்பட்டது. 6ம் பிரதிவாதி தாவாச்சொத்துக்களுடன் கூடிய சொத்துக்களை அனுபவம் செய்து வந்தகாலத்தில் வாதிகள் இடையூறும், தகராறும் செய்து வந்தார்கள். இந்நிலையில் இப்பிரதிவாதி தாவாச்சொத்துடன் கூடிய இதர சொத்துக்களை 28.02.2011ம்தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார். அதன் பிறகு இப்பிரதிவாதி தாவாச்சொத்தினை வீட்டுமனைகளாக பிரிவினை செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வந்தார். அதனை கெடுக்கவே இவ்வழக்கினை தாக்கல் செய்தார். தாவாச்சொத்தில் இந்த பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையும், பாத்தியமும் உள்ளது. வழக்குமூலம் உண்மையல்ல. எனவே, வாதிகளின் வழக்கு இப்பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை, ஆகியவற்றினை ஆய்ந்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன.

1. வாதிகளுக்கு தாவாச்சொத்தில் முழு உரிமை உள்ளதா?
2. 7ம் பிரதிவாதி 28.02.2011ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின்படி வழக்கு சொத்தை வாங்கியுள்ளாரா?

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:20:53 +0530

3. வாதிகளுக்கு தாவாப்படி விளம்புகை மற்றும் அதன் தொடர்பரிகாரமாக செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிகளுக்கு தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
5. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

13. வாதிகளின் தரப்பில் 5ம்வாதி செல்வகுமார் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 7ம் பிரதிவாதி கண்ணதாசன் பி.வா.சா1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 சான்றாணவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

14. வாதிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வாதிகளுக்குண்டான நிலங்களை சுற்றிலும் மூன்று பக்கம் 6,7 பிரதிவாதிகளின் நிலங்கள் உள்ளது எனவும்,நடு மத்தியில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது எனவும், இதனை நீண்ட நாட்களாகவே 6,7 பிரதிவாதிகள் குறைந்த விலைக்கு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை கேட்டு வாதிகள் தர மறுத்ததால், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை போலியாக ஆவணங்கள் தயார் செய்து 6,7 பிரதிவாதிகள் நிலங்களை அபகரிக்க திட்டமிட்டதால், வாதிகளுக்கும் 6,7 பிரதிவாதிகளுக்கும் பகை ஏற்பட்டது எனவும், ஆதியில் தாவா சொத்து 1ம் வாதியின் கொல்லுதாத்தாவான முத்து நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது எனவும், முத்து நாயுடு காலத்திற்கு பின்பு அவரது மக்கள் ராமசாமி நாயுடு, வரதராஜு நாயுடு, ரெங்கராஜு நாயுடு ஆகியோர்கள் தங்களுக்குள் 15.03.1961ம் தேதி பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு, பாகம் செய்த நாள் முதல் 1ம் வாதியும் அவரது குடும்பத்தினரும் சர்வ சுதந்திரமாக தாவாச்சொத்தில் வேண்டும் பயிர் சாகுபடி செய்து வந்தார்கள் எனவும், இதில் 1ம் வாதியின் அப்பாவும், இதர வாதிகளின் தாத்தாவுமான வரதராஜு நாயுடு என்பவருக்கு B ஷெட்யூல் காட்டப்பட்டுள்ளது எனவும், 6ம் பிரதிவாதி வாதிகளின் குடும்பம் மீது துறையூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் CC165/2010 என்ற வழக்கை தாக்கல் செய்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் தேடும் பட்சம் 2010ம் வருடம் வாக்கில் 6ம் பிரதிவாதி தமக்கு எவ்விதத்திலும், பாத்தியமும், பின்தொடர்ச்சியும்

T Anbu Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:21:04 +0530

இல்லாத தாவா சொத்தை 7ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்திருப்பது தெரியவந்தது எனவும் வாதிட்டார்.

15. மேலும், சர்வே எண்.494/4ல் 0.10 செண்ட்நிலமும், 494/2 0.25 செண்ட் நிலமும், 494/3A–ல் பொதுப்பாதையும் வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்தது எனவும், இதில் சர்வே எண்.494/2ல் 0.25 செண்ட் நிலம் இது கிணறு கூட்டாகும் எனவும், சர்வே எண்.494/3Aல் இதுவும் பொதுப்பாதை கூட்டாகும். சர்வே எண்.494/4ல் 0.10 செண்ட் நிலம் மட்டுமே தற்சமயம் பிரச்சினையில் உள்ளது எனவும், 6,7 பிரதிவாதிகள் சர்வே எண்.494/4ல் 0.10 செண்ட் நிலத்தை தங்களுக்கு பாத்தியப்பட்டது போல எண்ணிக்கொண்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 10 செண்ட் நிலத்தையும், வீட்டுமனை போட்டு மனை பிரித்துக்கொடுக்க செப்பனிட்டு வேலை பார்த்து வருகிறார்கள் எனவும், அவ்வாறு 6,7 பிரதிவாதிகள் வீட்டுமனை போட்டு விற்பனை செய்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை. 6ம் பிரதிவாதி 2010ம் வருடம் வாக்கில் 7ம் பிரதிவாதிக்கு வழக்கிடை சொத்தையும் சேர்த்து தவறுதலாக ஜெனரல் பவர் பத்திரம் கொடுத்துள்ளார் எனவும், அதன் காரணமாக 7ம் பிரதிவாதி தனக்கு வழக்கு சொத்து முழுமையாக பாத்தியப்பட்டது என எண்ணிக்கொண்டு வீட்டுமனை போட்டு தொழில் லாபம் அடைய எத்தனித்து வருகிறார் எனவும் 6,7 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆக்கிரமிப்பு செய்து பிளாட் நிலம் போடுவதற்கு ஏற்பாடு செய்து, தொடர்ந்து அத்துமீரள் செய்து வருகிறார்கள் எனவும், தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் எனவும் வாதிட்டார்.

16. 7ம்பிரதிவாதியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், தாவாச்சொத்து இறந்துபோன ரெங்கசாமி நாயுடு மகன் சிதம்பரத்திற்கு 14.03.1961ம் தேதியில் ஏற்பட்ட பாகப்பத்திரத்தின் வாயிலாக மேற்படி பாகப்பத்திர A ஷெட்யூல் சொத்தினை அடைந்து அனுபோகம் செய்து வந்தார் எனவும், சிதம்பரம் தங்கள் வாரிசுகளான துரைராஜ், ஆனந்தகுமார் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு தாவா சொத்துடன் கூடிய குடும்ப சொத்துக்களை எவ்வித ஆதரவும் செய்யாமல் இறந்துவிட்டார் எனவும், அதன்பின்னர் துரைராஜ், ஆனந்தகுமார் தாவாச்சொத்துடன் கூடிய தங்களது குடும்ப சொத்துக்களை 24.09.1982ம் தேதி பாகம் செய்து கொண்டார்கள், அதில் எ ஷெட்யூலில் தாவாச்சொத்து ஒதுக்கப்பட்டு சர்வே எண்.494/4 ஏக்கர் 0.10 செண்ட் நிலமும், சர்வே

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:21:13 +0530

எண்.494/2 ஏக்கர் 0.25 செண்டில் உள்ள கிணறு பாகம் உள்பட துரைராஜ் அடைந்து கொள்வதற்கு பாத்தியப்படுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் பின் துரைராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்த வகையில் தாவாச்சொத்திற்கு சர்வே எண்கள் 494/3 எ,3 சி ஆகிய பிரிவினை செய்யப்பட்டுள்ளது எனவும், துரைராஜ் இறந்தபிறகு தாவாச்சொத்தினை அவரது மனைவி நாகமணி, மகன் சிவசந்திரன் மற்றும் மகள்கள் லட்சுமி, மோகனாம்பாள் ஆகியோர்கள் கூட்டு சொத்தாக அனுபவம் செய்து வந்தார்கள், அதனை வருவாய்த்துறையில் அங்கீகாரம் செய்து நாகமணி பேரில் தாவாச்சொத்தினைப் பொருத்து வருவாய்த்துறையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது எனவும், தாவாச்சொத்தினை நாகமணி மற்றும் அவரது மகன், மகள் ஆகியோர்கள் சேர்ந்து 29.10.2004 ம் தேதி ரெங்கநாதன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் எனவும், அதன்பின் ரெங்கநாதன் அனுபவம் செய்து வந்தார் எனவும், அதன்பின் ரெங்கநாதன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது எனவும், ரெங்கநாதன் துரைராஜ் சகோதரர் ஆனந்தகுமாரிடமிருந்து ஏற்கனவே 30.12.2002 ம் தேதி ஆனந்தகுமாருக்கு பிரிந்த பாகத்தினை கிரையம் பெற்று தற்போது நாகமணி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற தாவாச்சொத்தோடு சேர்த்து ஒன்றாக அனுபோகம் செய்து வந்தார், அதன் அடிப்படையில்தான் ரெங்கநாதனுக்கு வருவாய்த்துறையில் தாவாச்சொத்துக்களுடன் கூடிய இதர சொத்துக்களையும் சேர்த்து பட்டா வழங்கப்பட்டிருந்தது. மேற்படி ரெங்கநாதனிடமிருந்து 6 ம் பிரதிவாதி தாவாச்சொத்துக்களுடன் கூடி இதர சொத்துக்களை சேர்த்து 28.05.2009 ம் தேதி கிரையம் பெற்று தன் இஷ்டம்போல் அனுபவம் செய்து வந்தார் எனவும், அதன் அடிப்படையில் 6 ம் பிரதிவாதிக்கு வருவாய்த்துறையில் பட்டா வழங்கப்பட்டது. 6 ம் பிரதிவாதி தாவாச்சொத்துக்களுடன் கூடிய சொத்துக்களை அனுபவம் செய்து வந்த காலத்தில் வாதிகள் இடையூறும், தகராறும் செய்து வந்தார்கள், இந்நிலையில் இப்பிரதிவாதி தாவாச்சொத்துடன் கூடிய இதர சொத்துக்களை 28.02.2011 ம்தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார் எனவும், அதன் பிறகு இப்பிரதிவாதி தாவாச்சொத்தினை வீட்டுமனைகளாக பிரிவினை செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வந்தார் எனவும் அதனை கெடுக்கவே இவ்வழக்கினை தாக்கல் செய்தார் எனவும் எனவே, வாதிகளின் வழக்கு இப்பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என வாதிட்டு மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:21:30 +0530

Civil Appeal No. 2025 in Special Leave petition ( Civil) 2137 of 2025 reported in 2025 Live Law (SC) 382 Uma Devi and others Vs.Sri Anand Kumar and others என்ற வழக்கில் பதிவு சட்டப்படி தாவாச்சொத்தைப் பொருத்து பதிவு செய்யப்பட்ட ஆவணம் கொள்தகு அறிவிப்பாக கருதவேண்டும். அதன்படி காலவரையறைச்சட்டத்தால் வழக்கு பாதிக்கப்படுகிறது என வாதிட்டார்.

**17. <u>எழுவினா 1</u>**

**வாதிகளுக்கு தாவாச்சொத்தில் முழு உரிமை உள்ளதா– என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–**

வாதிகள் வழக்குரைப்படி தாவாச்சொத்தானது சர்வே எண்.494/4–ல் 0.10 செண்ட் நிலமும், சர்வே எண்.494/2 ல்– 0.25 செண்ட் நிலமும் மற்றும் மாமூல் தட நடை பாத்தியங்கள் மற்றும் வாய்க்காள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக விளம்புகைக்காகவும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வழக்குரை பத்தி 8 ல், சர்வே எண்.494/4 ல் 0.10 செண்ட் நிலமும், சர்வே எண்.494/2 ல் 0.25 செண்ட் நிலமும், சர்வே எண்.494/3 எ–ல் பொதுப்பாதை வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என குறிப்பிட்டும், மேலும், சர்வே எண்.494/2– 0.25 செண்ட் நிலம், இதில் கிணறு கூட்டாகும் என்றும், சர்வே எண்.494/3 எ– இதுவும் பொதுப்பாதை கூட்டாகும் என்றும் சர்வே எண்.494/4–0.10 செண்ட் நிலம் மட்டுமே தற்சமயம் பிரச்சினை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

18. வா.சா.1 5 ம் வாதி, 7 ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையில், சர்வே எண்.494/4–0.10 செண்ட் இந்த நிலத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் என தாவாச்சொத்து சர்வே எண்ணில் சர்வே எண்.494/2–0.25 செண்ட் கூட்டு என ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, இவ்வழக்கை பொருத்து பூசலில் உள்ள சொத்து விவரமானது தாவா சர்வே எண்.சர்வே எண்.494/4–0.10 செண்ட் மட்டுமே என வா.சா.1 தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்கு மூலம் பத்தி 4 ன் வாயிலாக ஒப்புக்கொண்டுள்ளார்.

19. வாதிகளின் தரப்பில் 5 ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, தாவாச்சொத்து சர்வே எண்.494/4–0.10 செண்ட் ஆனது, 15.03.1961 ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தின்படி இந்த தாவாச்சொத்து சர்வே

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:21:38 +0530

எண்.494/4–0.10 செண்ட் எனது தகப்பனார் வரதராஜ நாயுடுவிற்கு பாத்தியப்பட்டு, அன்று முதல் எனது தகப்பனார் அனுபவம் செய்து வந்ததாகவும், அதன்படியே எனது தகப்பனார் வரதாஜ் நாயுடு பெயரில் அ பதிவேடு வா.சா.ஆ.1 உள்ளது என்றும், பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ.4 எனது தகப்பனார் பெயரில் உள்ளது எனவும், அதேபோன்று வா.சா.ஆ.5 சிறுகுறு விவசாய அட்டை தாவாச்சொத்திற்கு தனது தகப்பனார் வரதராஜ் நாயுடு பெயரில் இருப்பதாகவும் சாட்சியமளித்துள்ளார். 15.03.1961ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தின்படி வா.சா.1ன் தகப்பனார் வதராஜ் நாயுவிற்கு தாவா சர்வே எண்.494/4–0.10 செண்ட் பாத்தியப்பட்டது என சாட்சியமளித்துள்ளார். ஆனால் அந்த ஆவணத்தினை வாதிகள் தரப்பில் ஆவணமாக குறியீடு செய்யவில்லை. மாறாக, அந்த ஆவணத்தினை பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளார். கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞரும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையிலேயே வாதுரைத்தார்.

20. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தினை கவனமாக பரிசீலிக்கையில், இந்த ஆவணமானது, வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு, அவரது சகோதரர்கள் ராமசாமி நாயுடு, ரெங்கராஜ் ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பத்திரமாக காணப்படுகிறது. இந்த ஆவணத்தில் பி ஷெட்யூல் சொத்து வாதியின் தகப்பனார் வரதராஜ் நாயுடுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தாவாச்சொத்தின் சர்வே எண் காணப்படவில்லை. மாறாக, பைமாஷ் 883, 891, 879, 877 ஆகிய நெம்பர்களில் காணி...... நிலத்தில் மேல்புறம் பொதுவில் பாதி நிலமும், தென்புறம் கூட்டுக்கரையில் உள்ள ஒரு பங்கும், மேற்படி 891 நெம்பரில் உள்ள கல்வெட்டு கிணறில் பொதுவில் பாதி பாத்தியமும், மேற்படி கிணற்றில் உள்ள தென்புறம் கவலேத்து துளை 2ல் மேல்புற துளை பூராவும் பாத்தியமும்..... என காணப்படுகிறது.

21. கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர், இவ்வாறு சொல்லப்பட்ட வாதியின் தகப்பனார் பாகப்பத்திரத்தில் பைமாஸ் நெம்பர் 891 என்பது தான் தற்பொழுது பூசலுக்குரிய தாவாச்சொத்து சர்வே எண்.494/4 ஆகும். அதற்கு அனுசரணையாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் பைமாஸ் நெம்பர் 891க்கு தற்பொழுது சர்வே எண்.494/4 என வரிசை எண்.7ல் காட்டப்பட்டுள்ளது. ஆனால், வாதிகள் வாதிட்டவாறு, பைமாஸ் நெம்பர் 891ல் 0.10 செண்ட் நிலம் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக தெளிவாக

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:21:48 +0530

காணப்படவில்லை. மேலும், பைமாஸ் நெம்பர் 891ல் உள்ள கல்வெட்டு கிணற்றில் கவலேத்து கிணற்றை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வாதிகள் வாதிட்டவாறு பைமாஸ் நெம்பர் 891 வாதிகள் குறிப்பிட்டபடி வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது கல்வெட்டு கிணற்றைப்பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.ஆ.1 2012 ம்ஆண்டில் வாதிகளால் பெறப்பட்ட அ பதிவேடு தாவா.சர்வே எண்.494/4, வாதிகளின் தகப்பனார் மு.வரதராஜ் நாயுடு பெயரிலேயே காணப்படுகிறது. அதேபோன்று வா.சா.ஆ.4 பட்டா பாஸ்புத்தகமும், வாதிகளின் தகப்பனார் பெயரில் தாவாச் சொத்து சர்வே எண்.494/4– 0.10 செண்ட் நிலம் என காணப்படுகிறது. அதேபோன்று வா.சா.ஆ.5 சிறுகுரு விவசாய அட்டையும் தாவாச்சொத்திற்கு உண்டானது. வாதிகள் தகப்பனார் வரதராஜ் நாயுடு பெயரில் காணப்படுகிறது. சுருக்கமாக வா.சா.ஆ.1 அ பதிவேடு, 31.12.1961 ம் தேதியிட்டது, வா.சா.ஆ.4 பட்டா பாஸ்புத்தகம் 1974 ம் ஆண்டிற்கு உரியது, வா.சா.ஆ.5 சிறுகுரு விவசாயஅடையாள அட்டை 25.07.1978 ம் தேதியிட்டு காணப்படுகிறது. மேற்கண்ட மூன்று ஆவணங்களும் உடமை ஆவணங்கள், உரிமை ஆவணங்கள் அல்ல. இவைகள் அனைத்தும் வாதிகள் வழக்குப்படி வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு பெரிலேயே உள்ளது.

22. பி.வா.சா.1 கண்ணதாசன், 7 ம் பிரதிவாதி முதல் நிரூபண வாக்குமூலத்தில், பி.வா.சா.ஆ.1 ஆன 14.03.1961 ம் தேதியிட்ட பத்திரத்தின்படி ரெங்காமி மகன் சிதம்பரத்திற்கு தாவாச்சொத்து பாத்தியப்பட்டது என சாட்சியமளித்துள்ளார். எனவே, இந்த பி.வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தினை கவனமாக பரிசீலிக்கையில், வாதிகளின் தகப்பனார் வதராஜ் நாயுடு, வரதராஜ் நாயுடுவின் சகோதரர்கள் ராமசாமி, ரெங்கராஜ் ஆகியோர்கள் மற்றும் 7 ம்பிரதிவாதி கிரையம் பெற்ற ஆனந்தகுமார்( 6 ம் பிரதிவாதி) தகப்பனார் சிதம்பரம்ஆகியோர்களுக்கு இடையே நடைபெற்ற பாகப்பிரிவினை பத்திரத்தில், எ ஷெட்யூல் சொத்து 6 ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது எனவும், அதன் பைமாஸ் நெம் 892 எனவும் வாதிட்டார். எனவே, வா.சா.ஆ.2, வாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்ட பைமாஸ் எண், புல எண் பட்டியலில் வரிசை எண்.7 ல் வாதிகள் வழக்கறிஞர் வாதிட்டவாறு பைமாஸ்நெம்பர் 891 க்குத்தான் சர்வே எண்.494/4 கட்டுப்பட்டது. எனவே,

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:22:04 +0530

பிரதிவாதிகளின் இந்த வாதமானது ஏற்கத்தக்கதல்ல. ஆனால், இதே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிகளின் உரிமை கோரும் ஆவணமான பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட அதே வாசகங்கள் அதாவது ..... பைமாஸ் நெம்பர்.877– 879–891 இந்த நெம்பர்களில் காணிகரு நிலமும், மேற்படி 891 பைமாஸ் நெம்பரில் இருக்கும் கல்கட்டு கிணறு–1ல் பொதுவில் பாத்தியமும், மேற்படி கிணற்றில் கீழ்புறம் உள்ள ..... என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வாதிகள் கூறியபடி 15.03.1961ம் தேதியிட்ட பாகப்பத்திரம் பி.வா.சா.ஆ.2ம், பிரதிவாதிகள் கூறிய 14.03.1961ம் தேதியிட்ட பாகப்பத்திரம் பி.வா.சா.ஆ.1ல் தாவாச்சொத்து சம்மந்தப்பட்ட பைமாஸ் நெம்பர் 891ஐப் பொருத்து ஒரே மாதிரி எழுதப்பட்டுள்ளது. எனவே, வாதிகள் கூறியபடி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின்படியும், பிரதிவாதிகள் கூறியபடி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படியும் சர்வே எண்.494/4–0.10 செண்ட் தனிப்பட்ட முறையில் வாதிகளின் தகப்பனார் வரதாஜ் நாயுடுவிற்கோ, பிரதிவாதிகளின் முன்னோர்கள் சிதம்பரத்திற்கு பாத்தியப்பட்டதாக இருதரப்பிலும் வழக்கினை நிரூபிக்கவில்லை.

23. வா.சா.1 செல்வகுமார் 10.07.2025ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் 6ம் பிரதிவாதி ஆனந்தகுமார், முத்துநாயுடு, ரெங்கசாமி நாயுடு ஆகியோர்களின் உறவு முறையினை ஒப்புக்கொண்டும், ரெங்கசாமி நாயுடு சொத்தை ஆனந்த குமார் அடைந்தார் என்றும், முத்துசாமி நாயுடு நிலத்தினைநாங்கள் அடைந்தோம் என்றும் உறவுமுறையினை ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். ஆனால், வாதிகள் தரப்பில் மேலே சொன்னதுபோன்று வா.சா.ஆ.1 அ பதிவேடு, 31.12.1961ம் தேதியிட்டது, வா.சா.ஆ.4 பட்டா பாஸ்புத்தகம் 1974ம் ஆண்டிற்கு உரியது, வா.சா.ஆ.5 சிறுகுரு விவசாய அடையாள அட்டை வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு பெயரில் காணப்படுகிறது. இந்த மூன்று உடமை ஆவணங்களும் மேலே சொன்னது போன்று 1974, 1978, 1961 என காலத்தில் பிந்தைய ஆவணமான பட்டா பாஸ்புத்தகம் உடமை ஆவணமாக காணப்படுகிறது.

24. இந்நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் 1982ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணமானது,6ம் பிரதிவாதி ஆனந்தகுமார் மற்றும் அவரது சகோதரர் துரைராஜ் ஆகியோர்களுக்கிடைய ஏற்படுத்திக்கொண்ட பாகப்பத்திரம் ஆகும். இந்த ஆனந்தகுமார் எனக்கு சித்தப்பாமுறை பங்காளி என வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார்.

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:22:13 +0530

மேலும் ரெங்கசாமி நாயுடு வழி வந்த ஆனந்தகுமார் ரெங்கசாமி நாயுடு சொத்தை அடைந்தார் என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளார். வா.சா.1 05.08.2025 ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் சிதம்பரம் நாயுடுவிற்கு கிடைத்த பாகப்பத்திரம் மூலம் கிடைத்த சொத்தினை அவருடைய வாரிசுகளான துரைராஜ், ஆனந்தகுமார் ஆகியோர்கள் 24.09.1982 ம் தேதி பாகப்பத்திரம் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளார். அந்த பாகப்பத்திரமானது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

25. மேற்கண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரத்தில், எ ஷெட்யூல் சொத்தை துரைராஜ் அடைந்துகொள்ளவேண்டிய பாகச்சொத்தின் விவரத்தில், அயன் புன்சை சர்வே எண்.494/4–0.10 செண்ட் இதற்கு நான்கெல்லை விவரமாக முத்துகிருஷ்ணன் நிலத்திற்கு கிழக்கு, சின்னப்பிள்ளையம்மன் கோவிலுக்கும் தெற்கு, போக நிலத்திற்கும் மேற்கு, பொது வாய்க்காலுக்கும் வடக்கு என நான்கெல்லை விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று வா.சா.1 குறுக்கு விசாரணையில் தொடர்ச்சியாக சிதம்பரம் நாயுடுவிற்கு 1961 ம் ஆண்டு பாகப்பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்ற எ ஷெட்யூல் சொத்தில் தாவா சொத்தின் சர்வே எண்.494/4 உள்ளது என்றால் சரிதான் என 05.08.2025 ம் தேதியிட்டு பக்கம் 11 ல் இறுதிபகுதியில் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்திருப்பது பி.வா.சா.ஆ.1 ஆவணத்தினை ஒப்புக்கொண்டுள்ளது போல் உள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகளின் தகப்பனார் சிதம்பரத்திற்கு தாவாச்சொத்து பைமாஸ் எண்.891 குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த நெம்பரில் கல்வெட்டு கிணற்றைப்பற்றி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு முதல் வாதி முத்துகிருஷ்ணனுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் பி.வா.சா.ஆ.3 வாதிகள் கூறியவாறு 15.03.1961 ம் தேதியிட்ட ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு பாத்தியப்பட்டதாக கூறி சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்துள்ளார். ஆனால் அவ்வாறு செட்டில்மெண்ட் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு தாவா சொத்தான சர்வே எண்.494/4 ஐப் பற்றி குறிப்பிடப்படவில்லை. எனவே, வாதிகளின் தகப்பனார் தாவாச்சொத்தின் சர்வே எண்ணில் அனுபவத்தில் இல்லை என பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். அவ்வாறு அனுபவத்திலும், சுவாதீனத்திலும்

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:22:22 +0530

இருந்திருந்தால் இந்த தான செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.3 ல் முதல் வாதிக்கு சொத்துக்களை எழுதி வைக்கும்போது, தாவாச்சொத்தையும் குறிப்பிட்டு இருப்பார் என வாதிடப்பட்டது.

26. வாதிகள் தாவா சொத்து சர்வே எண்.494/4–க்கு மூல ஆவணமாக பி.வா.சா.ஆ.2 பாகப்பத்திரத்தில் பிரதிவாதிகள் தாவாச்சொத்து சர்வே எண்ணின் மூல ஆவணமாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தினை முன்னிலைப்படுத்துகிறார்கள். ஆனால் மேலே குறிப்பிட்டவாறு இந்த இரு ஆவணங்களிலும் பைமாஸ் நெம்பர் 891 குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் குறிப்பிடவில்லை. மேலும் இந்த பைமாஸ் நெம்பரில் உள்ள கிணறு கல்வெட்டைப் பொருத்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு ஆவணங்களிலும் சர்வே எண்.494/4–0.10 செண்ட் வாதிகளுக்கோ, பிரதிவாதிகளுக்கோ பாத்தியப்பட்டதாக இருதரப்பிலும் தெளிவுப்படுத்தவில்லை. ஆனால் வாதிகள் தரப்பில் மேலே சொன்னவாறு வா.சா.ஆ.1 அ பதிவேடு, 31.12.1961ம் தேதியிட்டது, வா.சா.ஆ.4 பட்டா பாஸ்புத்தகம் 1974ம் ஆண்டிற்கு உரியது, வா.சா.ஆ.5 சிறுகுரு விவசாயஅடையாள அட்டை ஆகிய உடமை ஆவணங்கள் காணப்படுகிறது. இந்த ஆவணங்களில் கடைசி ஆவணமான வா.சா.ஆ.4 பட்டா, 1974ம் ஆண்டிற்கு பிறகுதான், பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரமானது துரைராஜ், 6ம் பிரதிவாதி ஆனந்தகுமாருக்கு இடையே தாவாச்சொத்தைப் பொருத்து எழுதப்பட்ட பாகப்பத்திரமாக உள்ளது. இந்த பாகப்பத்திரத்தின்படி மேலே கண்டவாறு தாவாச்சொத்து துரைராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ளது.

27. இந்நிலையில், 1 முதல் 5 வரையிலான அரசுவழக்கறிஞர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவாச்சொத்து சர்வே எண்.494/4 நெம்பர் சர்வே எண்.494/3பி– உடன் இணைக்கப்பட்டதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதுரைத்தார். தற்பொழுது தாவாச்சொத்தின் சர்வே எண்.சர்வே எண்.494/4, சர்வே எண்.494/3பி–உடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த சர்வே எண் முத்துகிருஷ்ணன் முதல் வாதி, 7ம் பிரதிவாதி கண்ணதாசன் மற்றும் இவ்வழக்கில் தரப்பினராக இல்லாத ஒரு பரிமளா ராணி பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் பதிவாகி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 7ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் இவ்வாறான உரிமை விளம்புகை வழக்குகளில் தாவாச்சொத்தில் அக்கரையுள்ள அனைவரையும் தரப்பினராக சேர்க்கவேண்டும். பரிமளா

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:22:35 +0530

ராணி என்பவர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காதது வழக்கை பாதிக்கும் என வாதிட்டார். இதற்கு வாதிகள் தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை.

28. வா.சா.ஆ.5 தாவா கிராம அ பதிவேட்டில், அரசு வழக்கறிஞர் தெரிவித்தவாறு தாவாச்சொத்து சர்வே எண்.494/4, சர்வே எண்.494/3 பி–உடன் இணைக்கப்பட்டுள்ளதால், சர்வே எண்.494/3 பி துரைராஜ் பெயரிலேயே தாக்கல் ஆகியுள்ளது. எனவே, வா.சா.ஆ.4 செயல்பாட்டிற்கு வந்ததாக கருதப்படுகிறது. அதன்பிறகு ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களில், தாவாச்சொத்தின் சர்வே எண்.494/4 இணைக்கப்பட்ட சர்வே எண்.494/3 பி– என்ற சர்வே எண்ணையே காட்டப்பட்டுள்ளது.

29. வாதிகள் கூறியபடி பி.வா.சா.ஆ.2 15.03.1961 ம் தேதியிட்ட ஆவணத்தில் வரதராஜ் நாயுடுவிற்கு தனிப்பட்ட முறையில் பைமாஸ் நெம்பர் 891 தற்பொழுது சர்வே எண்.494/4 –0.10 செண்ட் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் உடமை ஆவணங்கள் வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு பெயரில் வா.சா.ஆ.1,மற்றும் வா.சா.ஆ.4,5 ஆகிய உடமை ஆவணங்கள் காணப்படுகிறது. ஆனால் இந்த ஆவணங்கள் அனைத்தும் 1974 உடன் முடிவடைகிறது. அதன்பிறகு பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி, சிதம்பரத்திற்கு பாத்தியப்பட்டு நான்கெல்லை விவரம், தாவாச்சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பி.வா.சா.ஆ.3 ஆவணமானது 1982 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தினை வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு செல்லத்தக்கதல்ல என எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில், வாதிகளின் தகப்பனார் வரதராஜ் நாயுடு, 1 ம் வாதி முத்துகிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவாச்சொத்தின் சர்வே எண்.494/4 பற்றி குறிப்பிடப்படாததும், பிரதிவாதிகளுக்கு சாதகமாக அமைகிறது. சுருக்கமாக, 1974 ம் ஆண்டிற்கு பிறகு வாதிகள் தரப்பில் உடமை ஆவணம் கூட வாதிகள் முன்னிலைப்படுத்தவில்லை. மாறாக, பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி பிரதிவாதிகளின் தகப்பனார் துரைராஜ் என்பவருக்கு தாவாச்சொத்து பாத்தியப்பட்டு, தாவாச்சொத்து சர்வே

T Anbu
Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:22:53 +0530

எண்.494/4 ஆனது அரசு வழக்கறிஞர் வாதிட்டவாறு சர்வே எண்.494/3 பி–உடன் இணைக்கப்பட்ட தாவா கிராம அ பதிவேடு பி.வா.சா.ஆ.5 துரைராஜ் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

30. வாதிகள் தகப்பனார் வரதராஜ் நாயுடு பெயரில் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 உடமை ஆவணங்கள் மட்டுமே காணப்படுகிறது. 6ம் பிரதிவாதி ஆனந்தகுமார், வாதிகளின் சித்தப்பா முறை பங்காளி என வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். இந்த வாதிகள் மற்றும் 6ம் பிரதிவாதியின் முன்னோர்களுக்கிடையே பி.வா.சா.ஆ.1,2 ஆகிய பாகப்பத்திரங்கள் 1961ம் ஆண்டு ஏற்படுத்தியுள்ளது, இந்த இரு ஆவணங்களிலும் தாவாச்சொத்திற்கான பைமாஸ் நெம்பர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வாதிகள் தாவாச்சொத்து என குறிப்பிட்டுள்ள 0.10 செண்ட் நிலம் என நான்கெல்லை குறிப்பிட்டு வாதிகளுக்கோ, பிரதிவாதிகளின் முன்னோரான சிதம்பரத்திற்கோ பாத்தியப்பட்டதாக பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆகிய பாகப்பத்திர ஆவணங்களில் காணப்படவில்லை.வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1, 4, 5 ஆகிய உடமை அவணங்கள் 1974ம்ஆண்டோடு முடிவு பெற்றுவிட்டது. அதன்பிறகு பிரதிவாதிகளின் சகோதரர் துரைராஜ் என்பவருக்கும், 6ம் பிரதிவாதி ஆனந்தகுமார் ஆகியோர்களுக்கிடையேயான பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரத்தின்படி துரைராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டு, துரைராஜ் என்பவர் பெயரிலேயே அ பதிவேடு பி.வா.சா.ஆ.5 ஏற்பட்டு, துரைராஜ் காலமான பிறகு துரைரஜ் மனைவி மற்றும் மக்கள் ஆகியோர்கள் ஒரு ரெங்கநாதன் என்பவருக்கு அரசு தரப்பில் தெரிவித்தபடி, தாவாச்சொத்து சர்வே எண்.494/4, சர்வே எண்.494/3 பி–உடன் இணைக்கப்பட்டதால், மேலே சொன்னவாறு, பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ–9 வரையிலான ஆவணங்கள் இந்த இணைக்கப்பட்ட சர்வே எண்ணை குறிப்பிட்டு சொத்து பரிமாற்றங்கள் சுமார் 1982 முதல் வழக்கு தாக்கல் செய்த காலம் வரையிலான 2014 வரை பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளது.

31. வாதிகள் தரப்பில் உரிமை மூல ஆவணமாக வாதிடப்பட்ட பி.வா.சா.ஆ.2 ஆவணம் வாதிகள் வழக்கிற்கு வலு சேர்க்கவில்லை. வாதிகள் தரப்பில் உடமை ஆவணங்களான வா.சா.ஆ.1,4,5 ஆகிய ஆவணங்கள் 1974ம் ஆண்டோடு முடிவடைகிறது. அதன்பிறகு எந்த உடமை ஆவணங்களும் வாதிகள் தரப்பில் குறியீடு

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:23:01 +0530

செய்யப்படவில்லை. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரம் 1982ம் ஆண்டு ஏற்பட்ட பிறகு வழக்கு தாக்கல் செய்த காலமாக 2014 வரை வாதிகளின் தகப்பனாரோ அல்லது வாதிகளோ கடந்த 32 ஆண்டுகளாக தாவாச்சொத்து சம்மந்தப்பட்ட பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரத்தினை செல்லா நிலையானது என எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது காலவரையறை சட்டத்தால் பாதிக்கும் என கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டு, அதற்கு மேற்கண்ட முன் தீர்ப்பினை முன்னிலைப்படுத்தினார். மேற்கண்ட தீர்ப்புரையில் 1968ம் ஆண்டு பாகப்பிரிவினை நடந்து வருவாய்த்துறை ஆவணங்கள் மாற்றி பிறகு 2023ம் ஆண்டு 55 ஆண்டுகாலம் கழித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு காலவரை தோஷத்தால் பாதிக்கின்றது என வழக்குரையே உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்ட 7 விதி 11 ன்படி வழக்குரையே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்புரை இவ்வழக்கிற்கு பொருந்தும். மேற்கண்ட 1882 சொத்து மாற்றுச்சட்டம் பிரிவு 3 விளக்கம் –1ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆவணமானது சொத்தில் அக்கறை உள்ள அனைவருக்கும் கொள்தகு அறிவிப்பு ( Constructive Notice) என பத்தி 12, 13 ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**In the case at hand. partition took place way back in the year 1968, which is evident from the revenue record entries. The suit is filed in the year 2023. I,e, after a period of 55 years. Further many of the family members had executed registerred sale deeds in the year 1978. These sale deeds have been attached and on perusal it is observed that these a transaction to any party interested in th property. This Court in the case of Suraj Lamp Industries Pvt Ltc Vs. State of Haryana and another (2012) 1 SCC 656 held as under:**

**Registration of a document gives notice to the world that such a document has been executed registration provides safety and security to transactions relating to immovable property even if the documents lost or destroyed. It gives publicity and public exposure to documents hereby preventing forgeries and frauds in regard to transactions and execution of documents. Registration provides information to people who may deal with a property, as to the nature and extent of the rights which persons may ave affecting that property. In other words, it enables people to**

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:23:15 +0530

**find out whether any particular property with which they are concerned, has been subjected to any legal obligation or liability and who is or are the person(s) presently having right, title, and interest in the property. It gives solemnity of form and perpetuate documents which are of legal impportance of relevance by recording them, where people may see the record and enquire and ascertain what the particulars are and as far as land is concerned what obligations exist with regard to them. It ensures that evey person dealing with immovable property can rely with confidence upon the statement contained in the registers ( Maintained under the said Act) as a full and complete account of all transactions by which the title to the property may be affected and secure extracts/copies duly certified.**

**Applying this settled principal of law, it can safely be assumed that the predecessors of the Plaintffs had notice of the registered sale deeds ( executed in 1978) flowing from the partition that took place way back in 1968 by virtue of them being registered documents. In the life time of Mangalamma, these sale deeds have not been challenged, neither has partition been sought. Thus, the suit ( filed in the year 2023) of the Plaintiffs was prima facie barred by law. The Plaintiffs cannotreignite their rights after sleeping on them for 45 years**.

32. எனவே, இவ்வழக்கானது, பி.வா.சா.ஆ.4 ஆவணமான 1982 க்கு பிறகு சுமார் 32 ஆண்டுகள் கழித்து 2014 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 25.08.2025 குறுக்கு விசாரணையில் 1987 ம் ஆண்டிற்கு பிறகு நான் சரிபார்த்த வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என பதில் அளித்துள்ளார். எனவே, 2014 ம் ஆண்டு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்திருந்தால், பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திர ஆவணம் தெரிந்திருக்கும். அப்பொழுது விளம்புகை பரிகாரம் கோருவதற்கான காலவரையறை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் 32 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார், மேலும், எந்த தேதியில் பிரதிவாதிகள் உரிமை கோரும் ஆவணங்கள் குறித்து தங்களுக்கு தெரிய வந்தது என்பது குறித்து வாதுரையில் குறிப்பாக வாதுரைக்கவில்லை. எனவே, மேற்கண்ட முன் தீர்ப்பின் படி இவ்வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் உரிமை ஆவணங்கள் எதுவும்

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:23:29 +0530

தாக்கல் செய்யப்படவில்லை. குறியீடு செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.2 ஆவணம் வாதிகளின் வழக்கிற்கு வலுசேர்க்கவில்லை. தகப்பனார் வரதராஜ் நாயுடு பெயரில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் உடமை ஆவணங்கள். 1974ம் ஆண்டிற்கு பிறகு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே தாவாச்சொத்து சர்வே எண்.494/2– 0.25 செண்ட் கூட்டாகும் என வாதிகளேஒப்புக்கொண்டுள்ளார். தாவாச்சொத்தின் மற்றொரு சர்வே எண்.494/4–.0.10 செண்ட் வாதிகளுக்கு உரிமை சித்தரிக்கவில்லை. எனவே, தாவாச்சொத்துக்களில் வாதிகளுக்கும் முழு மற்றும் தனி உரிமை இல்லை என இந்த எழுவினாவிற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

33. <u>**எழுவினா 2**</u>

**7ம் பிரதிவாதி 28.02.2011ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின்படி வழக்கு சொத்தை வாங்கியுள்ளாரா? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–**

பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி தாவாச்சொத்து சர்வே எண்.494/4 துரைராஜ் என்பவருக்கு பாகப்படி பாத்தியப்பட்டு, அரசு வழக்கறிஞர் வாதிட்டவாறு சர்வே எண்.494/3பி–உடன் இணைக்கப்பட்டு, தாவா கிராம அ பதிவேடு துரைராஜ் பெயரில் காணப்படுகிறது. அவர் இறந்த பிறகு அவரது மனைவி மக்கள் பி.வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் ஒரு ரெங்கநாதன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். அந்த ரெங்கநாதன் என்பவர் 6ம் பிரதிவாதி ஆனந்தகுமாருக்கு பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின்படி கிரையம் கொடுத்துள்ளார். அதன்பிறகு அந்த ஆனந்தகுமார் 7ம் பிரதிவாதி கண்ணதாசனுக்கு கிரையம் கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.1, 7ம் பிரதிவாதி உரிய ஆவணத்தினை பரிசீலனை செய்தபிறகுதான் கிரையம் பெற்றதாக சாட்சியமளித்துள்ளார். 1982க்கு பிறகு இந்த பி.வா.சா.ஆ.9, 7ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் ஏற்படுத்திய ஆண்டான 2011ம் ஆண்டுவரை வாதிகள் பெயரில் உரிமை ஆவணங்கள், உடமை ஆவணங்கள் காணப்படவில்லை. மாறாக, பிரதிவாதிகள் பெயரில் உடமை ஆவணங்கள், உரிமை ஆவணங்கள் காணப்படுகிறது. எனவே, 7ம் பிரதிவாதி 28.02.2011ம் தேதிய கிரையப்பத்திரத்தினை தாவாச்சொத்தை கிரையம் பெற்றார் என வாதிகளுக்கு எதிராகவும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாகவும் தீர்வு காணப்படுகிறது.

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:23:39 +0530

34. <u>எழுவினாக்கள் 3,4</u>

**வாதிகளுக்கு தாவாப்படி விளம்புகை மற்றும் அதன் தொடர்பரிகாரமாக செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? வாதிகளுக்கு தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–**

எழுவினாக்கள் 1,2 ஆகியவற்றிற்கு தீர்வு கண்ட வகையில் வாதிகளுக்கு தாவாச்சொத்தில் உரிமை சித்தரிக்கவில்லை என்றாலும், பிரதிவாதிகளின் முன்னோர்களின் கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரத்தினை வாதிகளின் முன்னோர்களோ, வாதிகளோ செல்லாது என நடவடிக்கை மேற்கொள்ளாததாலும் சுமார் 32 ஆண்டுகள் கழித்து மிகவும் காலதாமதமாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாலும், தவறாக ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திர ஆவணம் தனக்கு தெரிய வந்த தேதியினை குறிப்பிட்டு காலவரையறைக்குள் தாக்கல் செய்துள்ளதாக வாதுரைக்காததாலும், வாதிகளின் தகப்பனார் வதராஜ் நாயிடு வாதிகளின் உரிமை மூல ஆவணமாக தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.2 பாகப்பத்திரத்தின்படி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதி முத்துகிருஷ்ணனுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் தாவாச்சொத்தைப் பற்றி தெரிவிக்காததும், அரசு தெரிவித்தபடி தாவாச்சொத்தின் தற்போதைய சர்வே எண்.494/3பி என்ற எண் தவறாக வழங்கப்பட்டது, சட்டமுறைப்படி வழங்கப்படவில்லை என்பதைப் பொருத்து வாதிகள் தரப்பில் அவ்வாறு இணைக்கப்பட்ட சர்வே எண்ணின் செல்லு தன்மை பொருத்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாததாலும், தற்பொழுது பரிமளா ராணி என்பவரின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் உள்ளதில், அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்காததாலும், மிகவும் காலம் தாழ்த்தி அதாவது 32 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் சொத்து மாற்றுச்சட்டம் பிரிவு 3 விளக்கம் 1ன்படி பி.வா.சா.ஆ.4 ஆவணம் பொருத்து கொள்தகு அறிவிப்பு உள்ளது வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்படுகிறது என அனுமானம் கொண்டு தாவாச்சொத்தைப் பொருத்து வாதிகளுக்கு விளம்புகை பரிகாரமும், அரசு அலுவலர்களுக்கு எதிரான செயல்உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல .

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:23:47 +0530

35. தாவாச்சொத்திற்குண்டான உடமை ஆவணம் 1974ம் ஆண்டிற்கு பிறகு வாதிகளின் பெயரிலோ, வாதிகளின் முன்னோர்கள் பெயரிலோ காணப்படவில்லை. 1982ம் ஆண்டிற்கு பிறகு தாவாச்சொத்தைப் பொருத்து உரிமை ஆவணங்கள், உடமை ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்பொழுது தாவாச்சொத்து சர்வே எண்.494/3பி–உடன் இணைக்கப்பட்டுள்ளதால், பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி துரைராஜ் பெயரிலேயே அ பதிவேடு உள்ளது. எனவே, தாவாச்சொத்தின்அனுபவம் வாதிகளிடம் இல்லை என்பதாலும், வாதிகள் கோரிய விளம்புகை அதன் தொடர் பரிகாரமான செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும்நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வழக்கு எழுவினாக்களுக்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>36. எழுவினா.5</u>**

**வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–**

வழக்கெழுவினாக்கள் 1 முதல் ஆகியவற்றிற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால், வேறு எந்த பரிகாரங்களும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:23:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 செல்வகுமார்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்.**

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | 2012 ம் வருடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சர்வே எண்.485, 494 சம்மந்தமாக வழங்கப்பட்ட அ பதிவேடு | உண்மை நகல் |
| வா.சா.ஆ.2 | 10.12.2010 | மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட மேலெழுத்து | அசல் |
| வா.சா.ஆ.3 | 06.02.2014 | துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட நடவடிக்கை | அசல் |
| வா.சா.ஆ.4 | – | வரதராஜுபெயரில் வழங்கப்பட்ட பட்டா பாஸ்புத்தகம் | அசல் |
| வா.சா.ஆ.5 | – | வரதராஜுபெயரில் வழங்கப்பட்ட சிறு விவசாய அடையாள அட்டை | அசல் |
| வா.சா.ஆ.6 | – | சர்வே எண்கள் 485, 494 க்கான புலப்படங்கள் | சான்றிட்ட நகல்கள் |
| வா.சா.ஆ.7 | 18.02.2014 | வா.சா.1, அரியலூர் மாவட்ட சார்பதிவாளருக்கு 2339/1982 பதிவெண் கொண்ட பத்திரத்தினை ரத்து செய்ய கொடுத்த மனு | அசல் |
| வா.சா.ஆ.8 | 05.02.2014 | 1981 முதல் 1986 வரையிலான ஆண்டிற்கான வில்லங்க சான்றிதழ் | அசல் |

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:24:15 +0530

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.9 | 14.03.1961 | சிதம்பரம் நாயுடு வகையறா சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | 05.07.2024 | முத்துகிருஷ்ணன், 1,3 பிரதிவாதிகள், மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி ஆகியோர்களுக்கு அனுப்பிய மனு ( அஞ்சலக ரசீதுகளுடன்) | அசல் |
| வா.சா.ஆ.11 | 24.02.2025 | 3ம் பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய விசாரணை அறிவிப்பு | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்,</u>**

பி.வா.சா.1 கண்ணதாசன்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 14.03.1961 | சிதம்பரம் நாயுடு வகையறா சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 15.03.1961 | ராமசாமி நாயுடு வகையறா சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 09.06.2003 | கிருஷ்ணன் அவர்களுக்கு வரதராஜு நாயுடு எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 24.09.1982 | துரைராஜ், ஆனந்தகுமார் சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பத்திரம் | சான்றிட்ட நகல் |

T Anbu

Digitally signed by T Anbu
Date: 2026.08.10 20:24:37 +0530

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.5 | – | மருவத்தூர் கிராம சர்வே எண்.494/3 பி–க்கு உண்டான அ பதிவேடு | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 29.10.2004 | ரெங்கநாதன் அவர்களுக்கு, நாகமணி வகையறா சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 30.12.2002 | ஆனந்தகுமார், ரெங்கநாதனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | 28.05.2009 | ரெங்கநாதன், ஆனந்தகுமாருக்கு எழுதிக்கொடுத்த புன்சை நில கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.9 | 28.02.2011 | ஆனந்தகுமார் வகையறா சேர்ந்து கண்ணதாசனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.10 | – | 7ம் பிரதிவாதியின் வம்சாவழி பட்டியல் | அசல் |

T Anbu Digitally signed by T Anbu Date: 2026.08.10 20:24:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS